
## இயல் 6.7 - அளவைகள்


பயிற்சி எண் :: 6.7.1.3.J


அளவைகள் - கால அளவைகள் -
இருவித நேர அமைப்புகள் - விளக்கம்

## அளவைகள் - கால அளவைகள் - இருவித நேர அமைப்புகள் - விளக்கம்






1. ஒரு நாளில் உள்ள 24 மணி நேரத்தைக் குறிப்பிடுவதில் உலக அளவில் இரு முறைகள் பின்பற்றப்படுகின்றன.
2. **ஒன்று**, முழு தினத்தின் 24 மணி நேரத்தையும் அவ்வாறே குறிப்பிடுவது. அதாவது, ஒரு விமானம் கிளம்பும் நேரத்தை, உதாரணமாக, 9 மணி 20 நிமிடம் அல்லது 9:20 மணி எனக்குறிப்பிடுவது ஆகும். முக்கியமாக, விமானம் மற்றும் தொடர்வண்டி ஆகியவற்றின் வந்து சேரும் நேரம் மற்றும் புறப்படும் நேரம் ஆகியவற்றைக் குறிப்பிடுகையில் இம்முறை பின்பற்றப்படுகிறது. சில உதாரணங்கள் . . .


   (a) சென்னை எழும்பூரிலிருந்து நாகர்கோவில் வரை செல்லும் விரைவு வண்டி புறப்படும் நேரம் **17:30 மணி**. 

   (b) துபாயிலிருந்து டெல்லி வரும் விமானம் **14:15 மணிக்கு** வந்து சேரும். 

3. **இரண்டு**, ஒரு தினம் என்பது, பூமியின் சுழற்சியின் பலனாக, பகல் இரவு என இரு சம பாகங்களாக அமைந்திருப்பதால் 24 மணி நேரத்தை இரு 12 மணிகளாகப்பிரித்து குறிப்பிடுவது ஆகும். சூரியன் சரியாக உச்சிக்கு வரும் நேரத்தை **நண்பகல்** 12 மணி (12 Noon) எனவும் அதற்கு முன்பு உள்ள நேரத்தை மு.ப அதாவது **முற்பகல்** எனவும் அதற்குப் பின்பு உள்ள நேரத்தை பி.ப அதாவது **பிற்பகல்** எனவும் குறிப்பிடுகின்றோம். இதை ஆங்கிலத்தில், am (Anti miridian) pm (post meridian) எனக் கூறுகிறோம். இம்முறையில் இரவு 12 மணியை **நள்ளிரவு** எனக் குறிப்பிடுகின்றோம். சாதாரணமாக நம் வாழ்க்கையில் நடைமுறையில் வழங்கப்படும் எல்லா நேரங்களும் இம்முறையைச்சார்ந்ததே . . . சில உதாரணங்கள் . . .

   (a) நான் **காலை 8:30 மணிக்கு** பள்ளிக்குச் செல்வேன். 

   (b) என் தந்தை **மாலை 6.30 மணிக்கு** அலுவலகத்திலிருந்து திரும்பி வருவார். 

   (c) தினமும் **6:30 மு.ப மணிக்கு** செய்தித்தாள் கிடைக்கும். 

4. ஒரு நேரத்தை **6:45** மணி எனக்குறிப்பிட்டால் அதை நாம் 24 மணி முறையைச்சார்ந்தது எனப்புரிந்து கொள்ள வேண்டும். மாறாக, நேரத்திற்குப்பின் **மு.ப** எனவோ அல்லது **பி.ப** எனவோ குறிப்பிட்டிருந்தால் அதை 12 மணி முறையைச்சார்ந்தது எனப்புரிந்து கொள்ள வேண்டும்.
5. மு.ப அல்லது பி.ப எனச்சொல்லுவதற்கு பதிலாக, காலை, மாலை அல்லது இரவு எனக்குறிப்பிட்டு நேரத்தைச்சொல்லும் முறையும் வழக்கத்தில் உள்ளது.
6. ஒரு நேரத்தைக்காணவோ கேட்கவோ நேர்ந்தால், அது 24 மணி முறையில் குறிப்பிடப்பட்டுள்ளதா அல்லது 12 மணி முறையில் குறிப்பிடப்பட்டுள்ளதா எனக் குறிப்புணர்ந்து அதைத் தெரிந்து கொள்ள வேண்டும். **இது நம் அன்றாட வாழ்க்கையில் ஒரு மிக மிக முக்கியமான விஷயமாகும்**.
7. குறிப்பிடும் முறையைப்பொருத்து நேரத்தை எழுதும் விதம் மாறுபடும். உதாரணமாக, மதியம் 1 மணி 30 நிமிடத்தை 24 மணி முறையில் **13:30 மணி** எனவும் 12 மணி முறையில் **1:30 பி.ப** எனவும் எழுதுவது வழக்கம். இதை ஆங்கிலத்தில் **13:30 Hours** மற்றும் **1:30 pm** எனவும் எழுதுவது வழக்கம்.
8. நேரத்தைக்குறிப்பிடும் இரு முறைகளும் மணியைக் குறிப்பிடும் விதத்தில் மட்டுமே மாறுபடுகின்றன. நிமிடத்தையோ அல்லது நொடியையோ குறிப்பிடும் முறையில் எந்த வித மாற்றமும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.
9. ஒரு மிக முக்கியமான செய்திக்கூற்றை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, இவ்விரு முறைகளும் ஒரு குறிப்பிட்ட நேரத்தைக் சொல்லும் எழுதும் முறையாகும். ஆனால், இவ்விரு முறைகளுக்கிடையில் நேரம் என்பது மாறுபடுவதில்லை. எனவே, நடைமுறையில் நாம் இவ்விரு முறைகளுக்கும் நம்மைப் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். ஒரு நேரத்தை இரு முறைகளுக்கிடையே மாற்றி எழுதுவதற்கும் பழகிக்கொள்ள வேண்டும்.

Information, Rights & Disclaimers :: Sum & solution prepared on Saturday 27th November, 2021 :: 05:56 Hrs. All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Read :: 4/16/2020 dt. January 31, 2020. https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**